## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை – கொரோனா வைரஸ் (Covid-19) நோய்த்தொற்றை தடுக்க குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவு விதிக்கப்பட்ட நாட்களில் மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்கள்அலுவலக பணி மேற்கொள்வதிலிருந்து விலக்கு (Exemption) – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத்(அநமு) துறை**

**அரசாணை (நிலை) எண். 2** **நாள்:31.03.2020**

**விகாரி, பங்குனி–18, திருவள்ளுவர் ஆண்டு, 2051**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.152, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.23.03.2020.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 24.03.2020.

* * * * *

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தவிர்க்க அத்தியாவசிய பணிக்காக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உட்பட பல்வேறு துறைகள் பணியாற்றிட வேண்டும் எனஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட துறைகளில் மாற்றுத்திறனாளி பணியாளர்களும் பணிபுரியும் நேர்வில் அவர்களின் உடல்குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு அரசால் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாட்களில் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து தவிர்ப்பு (Exemption) வழங்குமாறு கோரிய மாற்றுத்திறனாளிகள் நல சங்கங்களின் கோரிக்கையை ஏற்று மாற்றுத்திறனாளி பணியாளர்கள் பணியில் இருப்பதாகக் கருதி அனுமதி வழங்கி உரிய ஆணை வழங்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு துறைகளிலும் உள்ள மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளான 24.03.2020 முதல் 14.04.2020 வரை அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) அரசு ஆணையிடுகிறது.

க. சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்

( ஆளுநரின் ஆணைப்படி )

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், சென்னை–5.

அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / அனைத்து துறைத் தலைவர்கள்,
இ.கோ. / உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 31/3/2020
31.03.2020